RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 257 செப்டம்பர் 21, 2026 திங்கள்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# தவெகவுக்கு எதிராக கொதித்தெழுந்த ஸ்டாலின் இடைத்தேர்தலில் எதிரொலிக்குமா?

சென்னை: செப்.21-

தமிழகம், இதுவரை கண்டிராத ஒரு இடைத்தேர்தலை சந்திக்கிறது. தேர்தலில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள், உடனே பதவியை ராஜிநாமா செய்துவிட்டு, மீண்டும் அதே தொகுதியில் வேட்பாளராக களமிறங்கும் வினோத சம்பவம் அரங்கேறி உள்ளது.

கடந்த ஏப்ரலில் நடந்த சட்டமன்ற பொதுத் தேர்தலில் ஆட்சியமைக்க தேவையான பெரும்பான்மை இடங்களை பெறாத தவெக, திமுக கூட்டணியில் அங்கம் வகித்து தேர்தலை சந்தித்த காங்கிரஸ், விசிக, இடதுசாரிகள் உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவை பெற்று ஆட்சி நடத்தி வருகிறது. தவெக கூட்டணி அரசுக்கு இடதுசாரிகள் ஆதரவு அளித்தாலும், அரசின் செயல்பாடுகளை கடுமையாக விமர்சித்து வருகின்றனர். குறிப்பாக, மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில், தவெகவுக்கு எதிராக திமுக, அதிமுக, நாம் தமிழர் கட்சியைத் தொடர்ந்து இடதுசாரிகளும் களமிறங்கியுள்ளனர்.

எனவே, கூட்டணி கட்சிகளின் விமர்சனங்களுக்கு பதிலடியாகவும், தவெக அரசின் 100 நாள் ஆட்சியின் செயல்பாடுகளுக்கு அளிக்கும் மதிப்பீடாகவும் இந்த தேர்தலில் தவெக வெற்றி பெற்றாக வேண்டிய நிலையில் உள்ளது. இதற்காக, மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் பிரச்சாரம் செய்வதற்கு தவெகவின் மூத்த அமைச்சர்கள், காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, விசிக தலைவர் திருமாவளவன் என 40 பேர் கொண்ட நட்சத்திர பேச்சாளர் பட்டியலை தவெக வெளியிட்டுள்ளது. அதிமுகவும் இடைத்தேர்தல் பிரச்சாரத்திற்காக, நட்சத்திர பேச்சாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது. ஆனால், திமுக இன்னும் நட்சத்திர பேச்சாளர்கள் பட்டியலை வெளியிடவில்லை. இருப்பினும், திமுக முப்பெரும் விழாவில் தவெகவை திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கடுமையாக விமர்சித்து பேசியுள்ளார்.

நடந்து முடிந்த தேர்தலில் இருபெரும் திராவிட கட்சிகளான அதிமுகவும், திமுகவும் தோல்வியை சந்தித்தாலும், கொளத்தூர் தொகுதியில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தோல்வி அடைந்தது, கட்சியினருக்கு மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அதைத் தொடர்ந்து சட்டமன்றத்தில் தவெக அமைச்சர்கள் பேசும்போது, முந்தைய திமுக அரசின் செயல்பாடுகளை விமர்சித்துப் பேசினர். குறிப்பாக, அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, திமுக தலைவர் மு.க.ஸ்டாலினின் பெயரை குறிப்பிட்டு கடுமையாக விமர்சித்துப் பேசினார்.

தவெக அமைச்சர்களின் பேச்சுக்கு திமுக தரப்பில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் திமுக மூத்த தலைவர்கள் பதில் அளித்தாலும், அவை பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்ற கருத்து பொதுவாக நிலவுகிறது.

முதலமைச்சர் விஜய், தனது மேஜையில் முந்தைய திமுக அரசு தொடர்பாக மூன்று முக்கிய கோப்புகள் இருப்பதாக கூறியிருந்தார். அதைத் தொடர்ந்து, சட்டமன்றத்தில் காவல் துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் பதிலுரை வழங்கி பேசிய முதலமைச்சர் விஜய், 1970-களில் அப்போதைய திமுக ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட வீராணம் கூட்டுக் குடிநீர் திட்டம் குறித்தும், அதில் ஊழல் நடைபெற்றதாக சர்க்காரியா கமிஷன் அறிக்கை அளித்தது குறித்தும் பேசினார். இதனால் அவையில் இருந்த திமுக உறுப்பினர்கள் கடுங்கோபம் அடைந்தனர்.



அதைத் தொடர்ந்து, 'எமர்ஜென்சி காலத்தில் திமுகவினர் 'மிசா' சட்டத்தை எதிர்கொண்டதாகக் கூறிக்கொள்ளும் கதைகளின் பின்னணி என்ன என்பது மக்களுக்கு நன்றாகவே தெரியும்' என்றும் முதலமைச்சர் விஜய் பேசினார்.

மிசா கைதைக் குறிப்பிட்டுப் பேசும்போது, தாடையைக் காண்பித்து முதலமைச்சர் விஜய் செய்த ஒரு சைகை, அவையில் பெரும் புயலைக் கிளப்பியது. சிறையில் மு.க.ஸ்டாலினின் தாடை எலும்பு உடைக்கப்பட்டதை கேலி செய்யும் விதமாகவே முதலமைச்சர் விஜய் சைகை செய்தார் என திமுகவும் அதன் கூட்டணி கட்சிகளும் கண்டனம் தெரிவித்தன.

மறுநாள், "எனது உடல்மொழி உள்நோக்கம் கொண்டதல்ல. யாருடைய தனிப்பட்ட உணர்வுகளையும் அல்லது வரலாற்றுத் தியாகங்களையும் காயப்படுத்தும் நோக்கம் எனக்கு இல்லை" என்று முதல்வர் விஜய் விளக்கம் அளித்திருந்தார்.

இருப்பினும், தவெக அரசுக்கு ஆதரவு தரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆகிய கட்சிகளின் தலைவர்களும் முதலமைச்சரின் பேச்சுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

முதலமைச்சரின் பேச்சுக்கு பதில் அளித்து வீடியோ வெளியிட்ட திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், "நீங்கள் சொல்வது சரிதான், அவசரநிலை காலத்தில் சிறையில் நடத்தப்பட்ட கடுமையான தாக்குதல்களால் என் தாடை எலும்பு உடைந்தது உண்மைதான்; அது வரலாற்றுத் தழும்பு" என்று அமைதியாக கூறினார்.

சட்டமன்றத்தில் திமுகவையும், அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலினையும் தவெக அமைச்சர்களும் முதலமைச்சர் விஜய்யும் கடுமையாக விமர்சித்துப் பேசும் வேளையில், திமுக மூத்த தலைவர்களான எ.வ.வேலு, கே.என். நேரு, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் பதில் அளித்தார்கள்.

முதல்வரின் பேச்சுக்கு எதிராக திமுகவினர் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியபோதும், பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியதாக தெரியவில்லை. மேலும், உதயநிதி ஸ்டாலின், சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவராக சிறப்பாக செயல்பாட்டாலும், முதலமைச்சர் விஜய்யின் பேச்சை ஒப்பிடும்போது, உதயநிதி ஸ்டாலினின் செயல்பாடுகள் வெகுஜன மக்கள் மத்தியில் சென்றடைகிறதா என்ற கேள்வி பரவலாக உள்ளது.

இந்த சூழ்நிலையில்தான், சனிக்கிழமை நடைபெற்ற திமுக முப்பெரும் விழாவில், தவெகவுக்கு எதிராக திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கொதித்தெழுந்தார். "என் மிசா கைதை உங்கள் எவனுக்கும் நிரூபிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. என்னுடைய தியாகத்திற்கு மதிப்பெண் போட உங்கள் எவனுக்கும் தகுதி கிடையாது. என் மிசா வரலாற்றை, அண்ணன் சிட்டிபாபு தனது சிறை டைரியில் பதிவு செய்திருக்கிறார். அதுதான் காலத்தால் அழிக்க முடியாத கல்வெட்டு. அதுமட்டுமல்ல, சிறைச்சாலைச் சித்திரவதைகளைப் பற்றி விசாரிக்க, எம்.ஜி.ஆர் அமைத்த இஸ்மாயில் கமிஷனின் அறிக்கை இருக்கிறது.

சாட்சி எல்லாம் சொல்லி இருக்கிறேன். அனைவரும் வந்து சொன்னார்கள். படிக்கத் தெரிந்தவன் அதையெல்லாம் எடுத்துப் படிக்கட்டும். வாக்களித்த மக்கள் வாக்குறுதிகளைப் பற்றி கேட்டால், அவதூறு பரப்பி ரீல்ஸ் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் கட்சிக்கு நியாயமாக 'தமிழக வெற்றிக் கழகம்' என்று இல்லாமல், 'தமிழக ரீல்ஸ் கழகம்' என்றுதான் பெயர் வைத்திருக்க வேண்டும். தி.மு.க. தந்தது ரியல் ஆட்சி! இவர்கள் நடத்துவது ரீல்ஸ் ஆட்சி. ஒரு முறை மக்கள் ஏமாந்திருக்கலாம். தொடர்ந்து ஏமாறுவார்கள் என்று நினைத்தால், ஏமாறப்போவது முதலமைச்சர்தான்.

அவதூறுகளைப் பரப்பி, கொச்சையாகப் பேசி, திமுகவை அவமானப்படுத்தலாம், பலவீனப்படுத்தலாம் என்று நினைத்துப் பலர் செயல்படுகிறார்கள். இதையெல்லாம் 78 வருடங்களாக நாங்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்" என்று பேசினார்.

மேலும், "இன்றைக்கு தவெக ஆட்சியில் இரண்டே இரண்டுக்கு நடுவில்தான் போட்டியே... ஒன்று மின்வெட்டு! இன்னொன்று அரிவாள் வெட்டு. பட்டப்பகலில் கொலைகள், துப்பாக்கிச் சூடுகள், ஆளுங்கட்சியினரே போதைப்பொருட்களை விற்பனை செய்வது, பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபடுவது என குற்றவாளிகளின் வேட்டைக்காடாக தமிழ்நாடு மாறியிருக்கிறது" என்று அவர் பேசினார்.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு தவெகவை பெரிய அளவில் விமர்சிக்காத மு.க.ஸ்டாலினின் பேச்சு, திமுகவினருக்கே வியப்பை ஏற்படுத்தி உள்ளது. எதிர் வரும் இடைத்தேரதலை மனதில் கொண்டு அவர் பேசியதாக தெரிகிறது. அவருடைய மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் எதிரொலிக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

அமைச்சர் பதிலடி

திமுக தலைவர் மு.க.ஸ்டாலினின் இந்த பேச்சு குறித்து அமைச்சர் ராஜ்மோகனிடம், செய்தியாளர்கள் கேட்டதற்கு, "பட்டிமன்ற பேச்சாளரான நான், சட்டமன்றத்தில் பேச ஆரம்பித்துவிட்டேன். ஆனால், முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின், பட்டிமன்ற பேச்சாளராக மாறிவிட்டார். ரைமிங்காக, எதுகை மோனையுடன் பேசிக் கொண்டிருக்கிறார். மக்களுக்கு யார் நல்லது செய்கிறார்கள் என்பதில்தான் போட்டி இருக்க வேண்டும். மூத்த அரசியல் தலைவரான அவர், அரசியல் லாபத்திற்காக அவ்வாறு பேசுகிறார்" என்று தெரிவித்தார்.

# "முதலீடுகளை ஈர்க்க தமிழக முதல்வர் லண்டன் சென்றிருக்கக்கூடாது" – அண்ணாமலை

மதுரை, செப்.21-

முதலீடுகளை ஈர்க்க தமிழக முதல்வர் விஜய் லண்டன் சென்றிருக்கக்கூடாது என 'வீ த லீடர்ஸ்' இயக்கத்தின் நிறுவனர் அண்ணாமலை தெரிவித்துள்ளார். மேலும், இந்த இயக்கம் மிக விரைவில் அரசியல் கட்சியாக மாறும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மதுரையில் 'வீ த லீடரஸ்' அமைப்பு சார்பில் வைகை ஆறு சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்ட வர்களுக்கு வைகை சிற்பி விருது வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. இதில் வீ தி லீடர்ஸ் அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் அ ண்ணாமலை விருதுகளை வழங்கினார்.

பின்னர் அவர் பேசியதாவது: மதுரை வைகை ஆற்றில் ஆக. 3-ல் இருந்து கள்ளழகர் ஆற்றில் இறங்கும் இடம் உட்பட 33 ஏக்கர் பகுதியை சுத்தம் செய்துள்ளோம். இப்பணியில் 163 டன் குப்பை சேகரிக்கப்பட்டுள்ளது. வைகை ஆற்றில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் வீடுகளின் மனித கழிவுகள் கலக்கின்றன.

தமிழகத்தில் புதிய அரசியலை, புதிய எழுச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக 'வீ த லீடரஸ்' அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு சார்பில் ஆகஸ்ட் மாதத்தில் இருந்து 10.17 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. அமைப்பு தொடங்கி 105வது நாளில் உறுப்பினர்கள் எண்ணிக்கை 20 லட்சத்தை தாண்டியுள்ளது.

ஒவ்வொரு நாளும் புதிய உயரத்துக்கு சென்று வருகிறோம். மக்களுக்கு எதாவது செய்ய வேண்டும். இது தான் மாற்றம். நம் இலக்கு பெரியது. குப்பைகளை மட்டும் அள்ளினால் போதாது. அரசியல் குப்பைகளையும் அள்ள



வேண்டும். அதற்கான காலம் வந்துள்ளது.

சுற்றுச்சூழல், மொழி, பாரம்பரியத்தை காப்பாற்ற வேண்டும். தவெக தேர்தல் அறிக்கையில் ஜல்லிக்கட்டை சர்வதேச விளையா ட்டாக அங்கீ கரிக்க குரல் கொ டுப்பதாக கூறியிருந்தனர். அந்த கட்சியின் சோழ வந்தான் எம்எல்ஏ சட்டப்பே ரவையில் ஜல்லிக்கட்டு இளைஞர்களை சீரழிப்பதாக பேசியுள்ளார்.

அந்த நேரத்தில் பேரவையில் இருந்த தமிழக முதல்வர் அப்போதே தவெக எம்எல்ஏ பேச்சுக்கு ஆட்சேபனை தெரிவித்திருக்க வேண்டும். தவெக தேர்தல் அறிக்கையில் என்ன இருக்கிறது என்பது தெரியாதவர்களாக தவெகவினர் உள்ளனர்.

நாட்டு மாடுகளை வளர்க்க ஜல்லிக்கட்டு உந்துதலாக உள்ளது. ஜல்லிக்கட்டு மிகப்பெரிய வரலாறு கொண்டது. சட்டப்பேரவையில் தவறாக பேசாதீர்கள். இதுபோன்ற பேச்சுகள் மதுரை மக்களை காயப்படுத்தும்.

மொழி, இனத்தை, தேசிய உணர்வுகளை பட்டி தொட்டிகளில் விதைக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு உள்ளது. சரியான தேசியத்தை வளர்க்க வேண்டும். தமிழன் என்பதுபோல் இந்தியன் என்பதும் நமக்கு பெருமைதான். நம் மொழியை உயர்த்திப் பிடிக்க வேண்டும். அதற்காக இன்னொரு மொழியை படிக்க வேண்டாம் எனக் கூறக்கூடாது.

மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கு பாஸ்களை பிளாக்கில் சினிமா டிக்கெட் விற்பது போல் விற்பனை செய்துள்ளனர். விஐபிக்கள் மட்டுமே குடமுழுக்கை பார்த்தனர். பொதுமக்களை அனுமதிக்கவில்லை.

கோயிலின் மாட வீதிகள் விஐபிக்களின் வாகனங்களை நிறுத்தவா உள்ளன? நான்கு பேருக்கு மட்டுமே தீர்த்தம் தெளித்தார்கள். மற்றவர்களின் மேல் தண்ணீர் தான் தெளிக்கப்பட்டது. பாதுகாப்பு பணியை மேற்கொள்ள வேண்டிய போலீஸாரை பொதுமக்கள் மீது தண்ணீரை தெளிக்க பயன்படுத்தியுள்ளனர்.

கோயிலில் செல்போன் தடை நியாயம் அல்ல. சினிமா தியேட்டர்கள், கல்யாண மண்டபங்களில் செல்போன்களுக்கு தடை விதிப்பீர்களா? இப்படி செய்தால் கோயிலுக்கு வரும் இந்து பக்தர்களின் எண்ணிக்கை குறையும். இதற்கு எதிராக முதலில் குரல் கொடுத்தது நாம் தான். எல்லோருக்குமான இயக்கமாக இருப்போம்.

தமிழக சட்டப்பேர வையில் எதை எதையோ பேசுகிறார்கள். பேச வேண்டியதை பேசுவதில்லை. சபாநாய கரில் தொடங்கி தவெக எம்எல்ஏ க்கள் ஒவ்வொருவரும் போட்டி போட்டுக் கொண்டு எந்த மதத்தை சார்ந்தவர்கள் என்பதை வெளிப்படுத்துகின்றனர். இதற்கு தான் சட்டப்பே ரவை உள்ளதா?

மக்கள் நம்மை உண்ணிப்பாக கவனிக்கிறா ர்கள். நம் பிரச்சினைகளை பேசுவா ர்களா? பொருளாதாரத்தை சரி செய்யும் வல்லமை உள்ள வர்களா? இவர்களிடம் ஆட்சியை கொடுத்தால் தொழில் புரட்சியை ஏற்படுத்துவார்களா? வேலைவாய்ப்புகளை உருவாக்குவார்களா? என நினைக்கிறார்கள். நம் செய்யும் ஒவ்வொரு வேலையும் மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தும்.

பெரியாரை முழுமையாக ஏற்கவில்லை. பெண் விடுதலை, சாதி ஒழிப்பு ஏற்கிறோம். கடவுள் மறுப்பு கொள்கை, பிரமாணர்கள் எதிர்ப்பு ஏற்கவில்லை. ஸ்ரீரங்கம் கோயிலுக்கு முன்புள்ள கடவுள் மறுப்பு கல்வெட்டு அங்கிருந்து அகற்றப்படும். அரசியல் மாற்றத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம்.

யாரையும் ஏமாற்றி வாக்குகளை பெற நினைக்கவில்லை. இந்த இயக்கம் விரைவில் அரசியல் கட்சியாக மாறுவது உறுதி. அந்த நாள் நான் நினைத்ததை விட மிக மிக வேகமாக வந்து கொண்டிருக்கிறது.

தமிழக முதல்வர் முதலீடு களை ஈர்க்க லண்டன் சென்றிரு க்கக்கூடாது. இங்கிலாந்து நாட்டில் பணமே இல்லை. அங்கு ஒரு சதவீத வளர்ச்சி தான் உள்ளது. அங்கிருந்து எப்படி தமிழகத்துக்கு முதலீடு வரும். முதல்வர் கோவைக்கும், மதுரைக்கும் வந்து தொழிலதிபர்களிடம் பேசி சலுகைகள் தருவதாக கூறி தொழில்களை மாநிலம் முழுவதும் விரிவாக்கம் செய்யுமாறு கூற வேண்டும்.

வெளிநாட்டு நாடகங்களை விட்டு உள்ளூர் பொருளா தாரத்தை ஊக்குவிக்கவும், சந்தைப்படுத்தவும் வேண்டும். இருப்பினும் தவெக அரசுக்கு ஒரு ஆண்டு நேரம் கொடுக்க வேண்டும். நாளைக்கு நாம் ஆட்சிக்கு வந்தாலும் ஒரு ஆண்டு நேரம் வேண்டும். 'வீ த லீடரஸ்' இயக்கத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் 30 ஆயிரம் பேரை உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் இலவச தரிசனம் செப். 23 வரை நீட்டிப்பு

மதுரை, செப்.21-

மதுரை மீனாட்சி யம்மன் கோயிலில் நடைபெற்ற குடமுழு க்கை ஒட்டி பக்தர்களின் வருகை அதிகரித்து வருவதால் இலவச தரிசனம் செப். 23 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.



உலகப் புகழ் பெற்ற மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் சங்க காலம் முதல் இருந்து வரும் பிரசித்திபெற்ற கோயிலாகும். ஆகம விதிப்படி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்கு நடத்த வேண்டும். கடந்த 2009 ஏப்.8-ம் தேதி நடந்தது. அதன்படி 2021-ம் ஆண்டு குடமுழுக்கு நடத்த கோயில் நிர்வாகம் சார்பில் ஏற்பாடானது. 2018-ம் ஆண்டு பிப்.2-ம் தேதி வீர வசந்தராயர் மண்டபத்திலுள்ள கடைகளில் ஏற்பட்ட தீ விபத்தில் மண்டபம் முழுவதும் சேதமடைந்தது. பின்பு வீர வசந்தராயர் மண்டபப் பணிகளை சீரமைத்து குடமுழுக்கு விழா நடத்த அப்போதைய திமுக ஆட்சியில் முடிவெடுக்கப்பட்டது.

ரூ.35 கோடியில் வீர வசந்தராயர் மண்டப சீரமைப்புப் பணிகள் கடந்த ஆக.30-ல் நிறைவடைந்து, மண்டபம் திறக்கப்பட்டது. வீர வசந்தராயர் மண்டபப் பணிக்காக 8 ஆண்டுகளாக அடைத்து வைக்கப்பட்டிருந்த கிழக்கு கோபுர வாசலும் திறக்கப்பட்டதால் பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இதையடுத்து, குடமுழுக்குப் பணிகள் தொடங்கின. வட க்காடி வீதியில் யாகசாலை பூஜைகளு க்காக 184 குண்டங்கள் அமைக்க ப்பட்டன. செப்.6-ல் பூர்வாங்க பூஜைகள் தொடங்கின. பின்பு செப்.11-ம் தேதி மாலையிலிருந்து முதல்கால யாகசாலை பூஜை தொடங்கியது. மூலவர் மீனாட்சி அம்மன், சுந்தரேசுவரர் சுவாமிக்கு மருந்து சாற்றும் வைபவத்தையொட்டி செப்.11 முதல் 16-ம் தேதி வரை மூலவர் சந்நிதிகள் அடைக்கப்பட்டன.

செப்.16-ம் தேதி காலை 5 மணியளவில் பத்தாம் கால யாக வேள்வி முடிந்து கலசங்கள் புறப்பாடு நடைபெற்றது. காலை 6 மணிக்குள் தெட்சிணாமூர்த்தி, துர்க்கை, லெட்சுமி, பத்தி ரகாளி, 63 நாயன்மார்கள் மற்றும் சுற்றுக்கொடி மரங்கள் உட்பட 414 பரிவார தெய்வங்களுக்கு நேற்று குடமுழுக்கு விழா நடைபெற்றது. காலை 7.40 மணியளவில் மீனாட்சி, சுந்தரேசுவரர் சந்நிதிகளின் தங்க விமானங்கள் மற்றும் ராஜகோபுர கலசங்களுக்கு ஒரே நேரத்தில் குடமுழுக்கு விழா நடைபெற்றது. 7.55 மணிக்கு மூலவர் மீனாட்சி அம்மனுக்கு குடமுழுக்கும், காலை 8.10 மணிக்கு மூலவர் சுந்தரேசுவரர் சுவாமிக்கு குடமுழுக்கும் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்டனர். இன்று வரை பக்தர்கள் இலவச தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுவர் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குடமுழுக்கு நடந்ததை ஒட்டி மீனாட்சி யம்மன் கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வருகின்றனர். இதையடுத்து இலவச தரிசன காலத்தை செப்.23 வரை நீட்டித்து கோயில் நிர்வாகம் இன்று அறிவித்துள்ளது.



## தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி கோட்டூர் கிராமத்தில் கோலாகலமாக நடந்து முடிந்த விநாயகர் சதுர்த்தி நிறைவு விழா

மாதவரம், செப்.21-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கி ரியம்பட்டு ஊராட்சி கோட்டூர் கிராமம் பெரு மாள் கோயில் தெருவில் 18-ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா வை முன்னி ட்டு ஆன்மீக சேவகர்கள் வழக்கறிஞர் உதயா மற்றும் ஐயர், புல்ல ட்மோகன், ராஜன், நாகராஜ், விக்கி உள்ளிட்ட கிராமபொ துமக்கள் ஏற்பாட்டில் கடந்த செப்டம்பர் 14-ம்தேதி சுமார் 10 அடி உள்ள அருள்மிகு சிவன் அருள்பெரும் ஸ்ரீ செல்வ விநாயகர் சிலை வைத்து தினமும் இனிப்பு, பழங்களை படையலிட்டு சிறப்பு பூஜைகள் செய்தனர்.பின்னர் உலகமக்கள் நன்மைகள் வேண்டி திருவிளக்கு பூஜை போன்றவை நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து விநாயகர் சதுர்த்தி நிறைவை முன்னிட்டு ஸ்ரீசெல்வவிநாயகருக்கு மகா தீபாராதனையுடன் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு பின்னர் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர். முடிவில் மேளதாளத்துடன் வாகனத்தில் ஸ்ரீ சிவன் அருள்பெரும் செல்வவி நாயகரை கொண்டு சென்று பழவேற்காடு கடலில் கரைத்தனர்.

## போதைப்பொருள் இல்லா திருப்பத்தூரை வலியுறுத்தி மாரத்தான்

திருப்பத்தூர், செப்.21-

ஆரோக்கியமான மக்கள், போதைப்பொருள் இல்லாத சமூகம், வளமான திருப்பத்தூர் என்ற நோக்கத்தை வலியுறுத்தி "Run for a Drug-Free Tirupattur" என்ற கருத்துடன் "Ist Run Tirupattur-2026" 8 கி.மீ. மாரத்தான், 20.09.2026 அன்று தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூரில் சிறப்பாக நடைபெற்றது.

ஆரோக்கியமான மற்றும் போதைப்பொருள் இல்லாத திருப்பத்தூரை உருவாக்கும் நோக்கில் நடைபெற்ற இம்மாரத்தானில் சுமார் 1,700 பேர் கலந்து கொண்டனர். இளைஞர்கள், பள்ளி மாணவர்கள், பெண்கள், ஆண்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன் இ.ஆ.ப., திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் N.திருப்பதி எம். எல்.ஏ மற்றும் திருப்பத்தூர் துணை காவல் கண்காணிப்பாளர் முரளி ஆகியோர் கலந்து கொண்டு இந்நிகழ்வை சிறப்பித்தனர்.

இம்மாரத்தான் முதுகலை சமூகப்பணி மனிதவள மேலாண்மைத் துறை, தூய நெஞ்சக் கல்லூரியால் ஏற்பாடு செய்யப்பட்டது.





நிகழ்வின் முதன்மை ஆதரவாளராக GOAT Energy நிறுவனமும், இணை ஆதரவாளராக ZS Bird Farm India - Breeding and Research Center நிறுவனமும் செயல்பட்டன. BIRDS (NGO), திருப்பத்தூர் மற்றும் பசுமை தாய்நாடு அறக்கட்டளையின் நிறுவனர் பசுமை சத்யராஜ் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. குறிப்பாக, போதைப்பொருள் பயன்பாட்டின் தீமைகள் மற்றும் அதன் பாதிப்புகள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் வீதிநாடகம் மற்றும் பறையாட்டம் உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது.

இளைஞர்கள் மற்றும் பொதுமக்களை ஆரோக்கியமான வாழ்க்கை முறையை நோக்கி ஊக்குவிப்பதுடன், "போதையைத் தவிர்ப்போம்: வாழ்க்கையை வளமாக்குவோம்" என்ற விழிப்புணர்வு செய்தியை வலியுறுத்திய இந்நிகழ்வு மிகச் சிறப்பாக நிறைவடைந்தது.

## காவேரிப்பட்டினம் தாம்சன் பேட்டையில் 26ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா, 7-ம் நாள் கோலாகலம், காவேரிப்பட்டினம் தென்பெண்ணை ஆற்றில் விநாயகர் சிலை கரைக்கப்பட்டது

கிருஷ்ணகிரி, செப்.21-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் தாம்சன் பேட்டையில் 26ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

விழாவையொட்டி, தாம்சன் பேட்டையில் 10 அடி உயரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ வரசித்தி விநாயகருக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, சிறப்பு பூஜைகள் மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன. வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட விநாயகர் சிலை பக்தர்களை வெகுவாக கவர்ந்தது.

விழாவின் 7-ம் நாளான இன்று காலை 10 மணி அளவில் விநாயகருக்கு சிறப்பு பூஜைகள் மற்றும் அபிஷேகம் செய்யப்பட்டது.

விழாவையொட்டி பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் அனைத்து சமுதாயங்களைச் சேர்ந்த பொதுமக்களும் கலந்து கொண்டு அன்னதானத்தை பெற்றுச் சென்றனர். இதன் மூலம் சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் விழா நடைபெற்றது.





தொடர்ந்து நடைபெற்ற சிறப்பு பூஜைகள், வழிபாடுகள் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பொதுமக்கள், இளைஞர்கள் மற்றும் பக்தர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

26ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழாவிற்கான ஏற்பாடுகளை ஸ்பெஷல் பாய்ஸ் குழுமத்தினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்.

விழாவின் நிறைவாக, விநாயகர் சிலை வாகனத்தில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. முக்கிய வீதிகள் வழியாக மேளதாளங்கள் முழங்கவும், பட்டாசுகள் வெடித்தும் ஊர்வலம் நடைபெற்றது. பின்னர் காவல்துறையினரின் பாதுகாப்புடன் விநாயகர் சிலை காவேரிப்பட்டினம் தென்பெண்ணை ஆற்றிற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு விசர்ஜனம் செய்யப்பட்டது.

## நம் நாட்டில் படிப்புகேற்ற வேலை, திறமைக்கேற்ற ஊதியம் இல்லை, நாட்டின் ஜனநாயகம், மதர்சார்பின்மை ஆகியவற்றை இரு கண்களாக பாதுகாக்க வேண்டும்

### மாணவர்களிடம் தமிழ்நாடு சட்டமன்ற சபாநயகர் ஜே.சி.டி பிரபாகர் சாய்ராம் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பேச்சு

தாம்பரம், செப்.21-

செங்கல்பட்டு மாவட்டம் மேற்கு தாம்பரம் சாய்ராம் கல்லூரியின் 27 வது பட்டமளிப்பு விழா கல்லூரியில் முதன்மை செயல் அலுவலர் சாய்பிரகாஷ் லியோமுத்து தலைமையில் நடைபெற்றது,

இதில் கலந்துக்கொண்ட தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி பிரபாகர் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கிய நிலையில் அவர்களிடம் உரையாற்றினார்





படிப்புக்கேற்ற வேலை, திறமைக்கேற்ற ஊதியம் என்பது நம்முடைய நாட்டில் இருக்கிறதா என்று கேட்டால், இன்னும் அப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகவில்லை என்கின்ற அந்த வருத்தத்தின் அடிப்படையிலேதான் படித்து விட்டு வேலையி ல்லாது இருக்கிற பட்டதாரி களுக்கு உதவித்தொகை வழங்க வேண்டும், அதேபோன்று டிப்ளமோ, கிராஜுவேட்ஸ்க்கு வழங்க வேண்டும் என்பதெல்லாம் நம்முடைய முதலமைச்சர் இன்றைக்கு சீரிய திட்டங்களை எல்லாம் இன்றைக்கு முனைப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள்

என்னைப் பொறுத்த வரைக்கும், "நெஞ்சமும் உண்டு நேர்மையும் உண்டு ஓடு ராஜா, நேரம் வரும் காத்திருந்து பாரு ராஜா. அஞ்சி அஞ்சி வாழ்ந்தது போதும் ராஜா, நீ அஞ்சாத சிங்கம் போல் எழுந்து ஓடு ராஜா" என்று புரட்சித்தலைவர் பாடிய அந்த வரிகள்தான் என் நினைவுக்கு வருகிறது. பயப்படாதீங்க. ஏனென்றால் ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு திறமை ஒளிந்திருக்கிறது. அதிகமான மதிப்பெண் படிக்கின்றவன் தான் வாழ்க்கையிலே வெற்றி பெறுவான் என்பது அல்ல, மதிப்பெண்கள் வாழ்க்கையை தீர்மானிப்பதில்லை. மதிப்பெண்களை வைத்து யாரையும் எடைபோடுவதில்லை.

எந்த கல்லூரியிலே படித்தாலும், எந்த பள்ளியிலே படித்தாலும் உங்களுக்குள் ஒளிந்து கொண்டிருக்கிற திறமைகளைக் கண்டுபிடிக்கப் பாருங்கள். வெறும் படிப்பு என்பது ஊதியத்தைப் பெறுவதற்காக, குடும்பச் சுமையை தாங்குவதற்காக, பொருளாதாரத்தை ஈட்டுகிற ஒரு கருவியாக கல்லூரி நிறுவனங்களை பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. இந்த கல்லூரியை விட்டு நீங்கள் வெளியே வருகிறபோது இந்த சமூகத்தை எப்படி பார்க்கின்றீர்கள்? இந்த நாடு தேசம் உங்களுக்கு என்ன கைமாறாக காத்திருக்கிறது? அவர்கள் என்ன செய்தார்கள், இந்த தேசத்திற்கு நீங்கள் என்ன கைமாறு செய்யப் போகின்றீர்கள்?

ரெண்டு தான் முக்கியமாக நான் உங்களுக்குச் சொல்வேன்: இந்த நாட்டினுடைய ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும். இந்த நாட்டினுடைய மதச்சார்பின்மை காப்பாற்றப்பட வேண்டும். இரண்டையும் ரெண்டு கண்களாக போற்றிப் பாதுகாப்பதற்கு படிப்பைக் காட்டிலும், வேலையைக் காட்டிலும், வருமானத்தைக் காட்டிலும், தொழிலைக் காட்டிலும் இந்த தேசத்தினுடைய பாரம்பரியத்தின் மாண்பினை, தமிழ்நாட்டு மக்களுடைய மாண்பினை பாரம்ப ரியத்தை காப்பாற்றுகிற அந்த பணியில் உங்கள் பங்களிப்பு நிச்சயமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

அதற்காகத்தான் கிராமத்தில் இருந்து தொடங்குவோம் வாருங்கள், சுகாதாரம், ஒளிமயமான எதிர்காலத்தைப் பின்னிப் பிணைக்கின்ற சுற்றுச்சூழல் என்று 17 திட்டங்களை முன்வைத்திருக்கிறார், ஐக்கிய நாடுகள் சபையினுடைய 17 திட்டங்களை முன்வைத்து களத்திலே இறங்கி இருக்கிறார் உங்கள் கல்லூரி தலைவர். நான் அவருக்கு என்னுடைய நல்வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வெறும் படிப்பறிவு மட்டும் இவர்களை வாழ்த்தி உயர்த்த முடியாது. படிப்பைத் தாண்டி இந்த உலகம் எப்படி இருக்கிறது என்று பார்க்கின்ற அந்தப் பார்வையை நீங்கள் அவர்களுக்கு அளித்துக் கொண்டிருக்கின்றீர்கள்.

நிச்சயமாக இந்த தமிழ்நாட்டில் சாய்ராம் கல்லூரியிலே படித்து பட்டம் பெற்று வெளியே வருகின்ற மாணவர்கள் முதல் மார்க் எடுக்கின்ற மாணவர்களாக மட்டுமல்ல, முதல் தர குடிமக்களாக வெளியே வந்திருக்கின்றார்கள் என்கின்ற அந்தச் செய்திதான் நம் அனைவருக்கும் மகிழ்ச்சியளிக்கும். அத்தகைய ஒரு கல்வி முறையைத்தான் நீங்கள் தொடர்ந்து தந்து கொண்டிருக்கின்றீர்கள். உங்கள் தந்தையாருடைய அடியொற்றி அவருடைய ஆசிர்வாதத்தோடு நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த சாய்ராம் பொறியியல் கல்லூரிக்கு பக்கபலமாக இருக்கிற பேராசிரியர் பெருமக்கள், ஆசிரியர் பெருமக்கள், ஊழியர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நல்வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம் இருக்கிறது. நம்முடைய அன்பு மாணவச் செல்வங்களுக்கு நான் ஒன்றைச் சொல்வேன்: உங்களை வளர்த்தெடுத்து ஆளாக்கிய பெற்றோர்களை மறவாதிருங்கள். நீங்கள் அவர்களுக்கு செய்கின்ற முழுமுதல் கடமை பணத்தால் அல்ல, அன்பால் அவர் உள்ளத்தை வெல்ல வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். "பாதுகாப்பும் பராமரிப்பும் பிள்ளைகளால் வந்தது" என்கின்ற அந்த மகிழ்ச்சியைக் காட்டிலும், "என் பிள்ளை எப்போதும் மாறாமல் எனக்காக அன்போடு இருக்கின்றான், நான் அவனுக்கு என்ன கைமாறு செய்தேன்" என்று எண்ணக்கூடிய வகையில் உங்கள் பெற்றோர்களை நீங்கள் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொண்டு, பட்டம் பெறுகின்ற அந்த மாணவச் செல்வங்களை நான் மனதார போற்றுகிறேன், வாழ்த்துகிறேன்.

இந்த படிப்பு என்பது இத்தோடு நின்றுவிடக்கூடாது. படிப்பு என்பது படித்து பட்டம் பெற்று வெளியே வருகிறபோதும், வேலை செய்கிறபோதும், தொழில் புரிகிறபோதும், தொழில் முனைவோராக நீங்கள் ஆகிறபோதும் இந்த படிப்பறிவு பட்டறிவு தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். சிறந்த பண்புள்ளவர்களாக, மனிதநேயமிக்கவர்களாக நீங்கள் மாறுவதற்கு இந்த கல்லூரி நிறுவனம் உங்களுக்கு அடித்தளத்தை ஏற்பாடு செய்திருக்கிறது. இதன் மீது கம்பீரமான மாளிகையை நீங்கள் கட்டுவீர்கள் என்றார்

## பெண்ணேஸ்வரமடம் துணை மின் நிலையத்தில் 22-ம் தேதி பராமரிப்பு பணி: காவேரிப்பட்டினம் உள்ளிட்ட பகுதிகளில் காலை 9 முதல் மதியம் 2 மணி வரை மின்தடை

கிருஷ்ணகிரி, செப்.21-

கிருஷ்ணகிரி மின் பகிர்மான வட்டம், கிருஷ்ணகிரி கோட்டத்திற்குட்பட்ட 110/33-11 கி.வோ. பெண்ணேஸ்வரமடம் துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளதாக செயற்பொறியாளர் பவுன்ராஜ் தெரிவித்துள்ளார்.

இதையொட்டி, 22.09.2026 செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை பெண்ணேஸ்வரமடம் துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் பெறும் பகுதிகளில் மின் நிறுத்தம் செய்யப்படும்.

இதன்படி காவேரிப்பட்டினம், தளிஅள்ளி, பெண்ணேஸ்வரமடம், சவுளூர், சந்தாபுரம், நரிமேடு, எர்ரஅள்ளி, போத்தாபுரம், பையூர், தேவர்முக்குளம், பெரியண்ணன்கொட்டாய், ஒட்டப்பட்டி, தேர்பட்டி, பாலனூர், நெடுங்கல், ஜெகதாப், வீட்டுவசதி வாரியம், பாளையம், மில்மேடு, இந்திரா நகர், குண்டலபட்டி, கத்தேரி, கருகன்சாவடி, மேல்மக்கான், தாலாமடுவு, பனகமுட்லு, தளியூர், மோரனஅள்ளி, தொட்டிப்பள்ளம், சாப்பர்த்தி, கொத்தலம், குண்டாங்காடு, போடரஅள்ளி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் மின் விநியோகம் இருக்காது.

எனவே, பொதுமக்கள் பராமரிப்புப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மின்வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

## விநாயகர் ஊர்வலத்தில் வெடி வெடிக்க கூடாது : காவல் துறையினர் சமரச பேச்சுக்கு பின்பு ஊர்வலம் தொடங்கியது

திண்டுக்கல், செப்.21-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கடந்த வாரம் விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு சுமார் 150 க்கும் மேற்பட்ட விநாயகர் சிலை பகுதி வரியாக வைக்கப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற்றனர்.

அதனை தொடர்ந்து இன்று இந்து முன்னணி சார்பாக விநாயகர் சிலை கரைப்பதற்கு முன் ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்ட நிலையில் அனைத்து பகுதிகளிலிருந்து வந்த விநாயகர் சிலைகள் அனைத்தும் எரிச்சாலையில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்வதற்கு வெடி வெடிக்க தொடங்கிய பொழுது காவல்துறையினர் தடை விதித்தனர் . மேலும் காவல்துறையினருக்கும் இந்து முன்னணியினருக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டு வரும்நிலையில் ஒருபுறம் காவல்துறையினர் வெடி வெடிக்க கூடாது என்றும் மறுபுறம் இந்து முன்னணி நாங்கள் வெடி வைக்காமல் விநாயகர் ஊர்வலம் நடத்த மாட்டோம் என்று வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

மேலும் காவல்துறையினர் அவர்களிடம் தற்போது சமாதான பேச்சு வார்த்தை நடைபெற்று உயர் அதிகாரியிடம் பேசுவதாக கூறிய நிலையில் கூட்டம் கலைந்து சென்றன இதன் காரணமாக ஏரிச்சலையும் பரபரப்பாக காணப்பட்டு வருகிறது.



■ திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த அம்பலூர், இராமநாயகண்பேட்டை இடையே பாலாற்றில் கட்டப்பட்ட தடுப்பணை அருகே நேற்று இரவு பெய்த கனமழையால் பாலாற்றில் தண்ணீர் வந்து கொண்டிருக்கின்றது, இதனை அறிந்த அம்பலூர் கிராமத்தின் சார்பில் ஊராட்சி மன்ற தலைவர் A.P.முருகேசன், மு.கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் A.R.ராஜேந்திரன் ஆகியோர் மலர்தூவி வணங்கி தண்ணீரை வரவேற்றார்கள். இதில் அம்பலூர் மேற்பட்டரை, கீழ்பட்டரை பாசன விவசாயிகள் A.M.மூர்த்தி, R.தசரதன், R.குமரேசன், K.கிரிதரன், D.சுரேந்தர், சீனிவாசன் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.



## அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் விநாயகர் சதுர்த்தி விழா நிறைவு

மாதவரம், செப்.21-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் 9-ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு வடகரை மற்றும் அழிஞ்சிவாக்கம் ஊராட்சி கிராமபொது மக்கள், விழா குழுவி னர்கள் சார்பில் சுமார் அடி உயரம் உள்ள அருள்மிகு ஸ்ரீ வெற்றி விநாயகர் சிலை வைத்து தினமும் இனிப்பு, பழங்க ளை படையலிட்டு சிறப்பு பூஜை கள் செய்து தூபதீப ஆராதனை காண்பி க்கப்ப ட்டது. இதனை த்தொடர்ந்து விநாயகர் சதுர்த்தி நிறைவை முன்னிட்டு ஸ்ரீ வெற்றிவிநா யகருக்கு மகா தீபாராதனையுடன் சிறப்பு பூஜைகள் செய்ய ப்பட்டு பின்னர் பக்தர்க ளுக்கு அன்னதானம் வழங்கினர். முடிவில் விழா குழுவினர்கள் மேளதா ளத்துடன் வாக னத்தில் ஸ்ரீ வெற்றிவி நாயகரை கொண்டு சென்று சென்னை பழவேற்காடு கடலில் கரைத்தனர்.



# ரயில்வே பாதுகாப்புப் படை தினம்: முதியோர் இல்லத்தில் சிற்றுண்டி வழங்கி கொண்டாட்டம்

மானாமதுரை, செப்.21-

ரயில்வே பாதுகாப்புப் படை தினத்தை முன்னிட்டு, மானாமதுரை ரயில்வே பாதுகாப்புப் படை சார்பில் முதியோர் இல்லத்தில் சிற்றுண்டி வழங்கப்பட்டதுடன், ரயில் பயணிகள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ரயில்வே பாதுகாப்புப் படை தினம் ஆண்டுதோறும் செப்டம்பர் 20-ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. இதையொட்டி மானாமதுரை ரயில்வே பாதுகாப்புப் படை ஆய்வாளர் சிவக்குமார் தலைமையில் போலீசார், தாயமங்கலம் மெயின் ரோட்டில் உள்ள ஹோலி கிராஸ் முதியோர் இல்லத்திற்கு சென்றனர்.

அங்கு தங்கியுள்ள முதியோர்களுக்கு சிற்றுண்டி வழங்கி அவர்களுடன் கலந்துரையாடினர். தொடர்ந்து முதியோர்களின் வாழ்த்துகளைப் பெற்று, அவர்களுடன் ரயில்வே பாதுகாப்புப் படை தினத்தைக் கொண்டாடினர்.

மேலும், ரயில் பயணிகளிடம் பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றுவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ரயில்வே கேட்டை கடந்து செல்லும் வாகன ஓட்டிகளுக்கும் பாதுகாப்பாகக் கடந்து செல்ல வேண்டியதன் அவசியம் குறித்து அறிவுறுத்தப்பட்டது.

ரயில் பயணத்தின்போது பாதுகாப்பு விதிகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், ரயில்வே கேட்டை கடக்கும்போது எச்சரிக்கையுடனும் பாதுகாப்புடனும் செல்ல வேண்டும் என்றும் ரயில்வே பாதுகாப்புப் படையினர் பொதுமக்களை கேட்டுக் கொண்டனர்.

# செக்கானூரணி புதிய பேருந்து நிலையத்திற்கு பி.கே.மூக்கையா தேவர் பெயர் சூட்ட கோரிக்கை: முதல்வர் விஜய் 28-ந்தேதி வருகையின்போது அறிவிக்க வலியுறுத்தல்





மதுரை,செப்.21-

செக்கானூரணியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்திற்கு கல்வித்தந்தை பி.கே. மூக்கையா தேவர் பெயரை சூட்ட வேண்டும் என முன்னாள் உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் பி.வி.கதிரவன் தலைமையில் நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தமிழக முதலமைச்சர் விஜய் வருகிற 28-ந்தேதி உசிலம்பட்டியில் நடைபெறும் தாய்மாமன் தங்க மோதிரத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளார். செக்கானூரணி வழியாக முதலமைச்சர் செல்ல உள்ள நிலையில், அங்குள்ள புதிய பேருந்து நிலையத்திற்கு பி.கே.மூக்கையா தேவர் பெயர் சூட்டப்படும் என்ற அறிவிப்பை வெளியிட வேண்டும் என கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செக்கானூரணி மற்றும் சுற்றுவட்டாரத்தில் உள்ள 11 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்றும் வகையிலும், முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார், திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் மணிமாறன் ஆகியோர் முன்வைத்த கோரிக்கைகளை ஏற்றும் வகையிலும் பெயர் சூட்டும் அறிவிப்பை முதலமைச்சர் வெளியிட வேண்டும் என நிர்வாகிகள் வலியுறுத்தினர்.

கல்வித்துறையில் பி.கே. மூக்கையா தேவர் ஆற்றிய பங்களிப்பையும், இப்பகுதி மக்களுடனான அவரது நீண்டகால தொடர்பையும் கருத்தில் கொண்டு, புதிய பேருந்து நிலையத்திற்கு அவரது பெயரை சூட்டுவது அவருக்கு உரிய மரியாதையாக அமையும் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

எனவே, 28-ந்தேதி முதலமைச்சர் செக்கானூரணி வழியாக வருகை தரும் போது, பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கையை ஏற்று, புதிய பேருந்து நிலையத்திற்கு கல்வித்தந்தை பி.கே. மூக்கையா தேவர் பெயர் சூட்டப்படும் என்ற அறிவிப்பை வெளியிட வேண்டும் என நிர்வாகிகள் வலியுறுத்தினர்.

இந்த கூட்டத்தில் தென்னிந்திய பார்வர்டு பிளாக் தலைவர் கே.சி. திருமாறன், நேதாஜி சுபாஷ் சேனை சுமன், மருதுபாண்டியர் முன்னேற்ற கழகம் மருது, பன்னியான் ஆனந்த் உள்ளிட்ட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் வடக்கு மாவட்ட அதிமுக சார்பில் அறிஞர் அண்ணாவின் 118-வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்

திருவள்ளூர், செப்.21-

திருவள்ளூர் வடக்கு மாவட்ட அதிமுக சார்பில் பேரறிஞர் அறிஞர் அண்ணாவின் 118-வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்



ஆரணி பஜார் வீதியில் திமுக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, திருவள்ளூர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும்,பொன்னேரி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சிறுணியம் பி.பலராமன் தலைமை தாங்கினார். இதில், கட்சியின் அமைப்புச் செயலாளரும்,செய்தி தொடர்பாளரும்,முன்னாள் அமைச்சருமான எஸ். கோகுலஇந்திரா,தலைமைக் கழக பேச்சாளர் முருகேசன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பேசினர்.முன்னதாக அனைவரையும் ஆரணி பேரூர் கழக செயலாளர் ஏ.எம்.தயாளன் வரவேற்றார். முடிவில்,ஆரணி அம்மா பேரவை செயலாளர் கே.என்.சீனிவாசன் அனைவருக்கும் நன்றி கூறினார். இதில்,ஒன்றிய செயலாளர்கள் டி.சி. மகேந்திரன்,ஜெகநாதபுரம் சம்பத் மற்றும்க ண்ணூர் சங்கர் உள்ளிட்ட மாவட்ட,ஒன்றிய பேரூர்,கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

நீலகிரி, செப்.21-

நீலகிரி மாவட்டம் வெலிங்டன் கண்டோன்மென்ட் பிரைமரி பள்ளியில், வெலிங்டன் கன்டோன்மென்ட் முதன்மை நிர்வாக அதிகாரி கிண்டியா அறிவுறுத்தலின் படி, சுகாதாரத்துறை சார்பில் திடக்கழிவு மேலாண்மை (SWM) விதிகள் 2026 குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மிக சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில், பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு திடக்கழிவுகளை முறையாக கையாளுதல், கழிவுகளை உருவாகும் இடத்திலேயே பிரித்துச் சேகரித்தல் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் அவசியம் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

குறிப்பாக ஈரக் கழிவு, உலர் கழிவு, சானிட்டரி கழிவு மற்றும் சிறப்பு பராமரிப்பு கழிவு என கழிவுகளை தனித்தனியாக பிரித்து வழங்க வேண்டும் என்றும், வீடுகள் மற்றும் நிறுவனங்களில் இருந்து உருவாகும் கழிவுகளை பொறுப்புடன் கையாள வேண்டும் என்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026-ன் முக்கிய அம்சங்கள், கழிவு உருவாக்குபவர்களின் கடமைகள், கன்டோன்மென்ட் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு மற்றும் அதிக அளவில் கழிவு உருவாக்கும் நிறுவனங்களின் பொறுப்புகள் குறித்தும் வெலிங்டன் கண்டோண்மென்ட் சுகாதார ஆய்வாளர் பழனிசாமி பொது மக்களிடையே மிக சிறப்பாக எடுத்துரைத்து விழிப்புணர்வினை ஏற்படுத்தினார்.

இந்த நிகழ்ச்ச்சியில் , பொது மக்கள், சுகாதார துறை ஊழியர்கள், திரளாக கலந்து கொண்டனர்.

# தாம்பரத்தில் இந்து புரட்சி முன்னணி சார்பில் 27ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா, கட்சியின் நிறுவனர் சந்திர குமார் தலைமையில் நடைபெற்றது

தாம்பரம், செப்.21-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் இந்து புரட்சி முன்னணி சார்பில் 27ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா, கட்சியின் நிறுவனர் சந்திர குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் நடிகை கஸ்தூரி கலந்துகொண்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார்.



பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய பெண்களுக்கு எதிராக ஆபாசமாக பேசி குற்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் சொந்தக் கட்சியினராகவே இருந்தாலும் கூட தற்போது உள்ள ஆளும் கட்சியினர் தகுந்த நடவடிக்கை எடுக்கிறார்கள் அதை நாம் பாராட்ட வேண்டும்

எப்பொழுதும் இடைத்தேர்தல் வந்தால் அதில் ஆளும் கட்சி தான் ஜெயிக்கும் இன்று புதிதாக ஒரு ஆளும் கட்சி அதிமுக மற்றும் திமுக இல்லாமல் தவெக வந்துள்ளது.

முதலமைச்சர் விஜய் லண்டனுக்கு சென்று வந்துள்ளார் முதலீடு ஈர்த்துள்ளார் என்று கூறுகிறார்கள் இது சம்பந்தமாக செய்தியாளர்களை சந்திக்கவில்லை முறையான தகவல்களை கூறவில்லை முதலீடு தீர்த்துள்ளது சம்பந்தமாக எந்த ஒரு அறிக்கையும் தற்போது வரை வெளிவரவில்லை என்பது கேள்விக்குறியாக்கி உள்ளது

வெளிநாடுகளுக்கு சென்று முதலீடு செய்ய வேண்டும் என்றால் மோடி மற்றும் சந்திரபாபு நாயுடு உள்ளிட்டோரை பார்த்து கற்றுக் கொள்ளுங்கள் என்று தமிழக முதலமைச்சர் விஜய்க்கு நடிகை கஸ்தூரி அறிவுரை

பட்டினப்பாக்கம்,பவர் (POWER), பரந்தூர்இந்த மூன்றும் தவெக அரசுக்கு சறுக்கல்களாக உள்ளது. பவர்க்கு இன்று புதிய IAS அதிகாரி ராதாகிருஷ்ணனை நியமித்து உள்ளார்கள்.

அதிமுக மற்றும் திமுக காலத்தில் இருந்த சிறந்த IAS அதிகாரி அவர் தற்போது உள்ள கரண்ட் பிரச்சனைக்கும்அவர்தான் தீர்வு சொல்ல முடியும்

திடீர் திடீரென மின்வெட்டு ஏற்படுகிறது அறிவிக்கப்படாத மின்வெட்டுகள் அவ்வபோது ஏற்படுகிறது.

முதலமைச்சர் விஜய்க்கு கடக ராசி என்பதற்காக கடல் பக்கத்திலேயே அதாவது மாஹாபலிபுரம் முதல் பட்டனபாக்கம் வரை இருக்க வேண்டும் என்று நினைக்கிறாரா என்று தெரியவில்லை

முதலமைச்சர் விஜயின் முதலீடுகளை ஈர்க்கும் லண்டன் பயணத்தில் வெளிப்படை தன்மையே இல்லை என்று அவர் கூறினார்



# கிருஷ்ணகிரி அருகே பழையபைனப்பள்ளி கிராமத்தில் பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் கூட்டம்

கிருஷ்ணகிரி, செப்.21-

குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம், முகவரி மாற்றம் உள்ளிட்ட குறைகள் பொதுமக்க ளிடமிருந்து பெறப்பட்டு உடனடியாக நிவர்த்தி செய்யப்பட்டது.

கூட்டத்தில் சமூக நுகர்வோர் பாதுகாப்பு நல சங்க மாநில பொதுச் செயலாளர் டாக்டர் சந்திரமோகன் கலந்து கொண்டு தமிழக அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு நன்றி தெரிவித்தார். வட்ட வழங்கல் அலுவலர் ரமேஷ்பாபு தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



■ கிருஷ்ணகிரியில் தனியார் விதை விற்பனை நிலைய ஊழியர் அருண்குமார் கல்லால் தாக்கி கொலை செய்யப்பட்டார். டாஸ்மாக் கடை அருகே ஏற்பட்ட தகராறில் கார்த்திக், அருண்குமாரை கல்லால் தாக்கியதாக போலீசார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பாக கார்த்திக் மற்றும் அவரது தந்தை கோவிந்தராஜ் ஆகியோரை போலீசார் கைது செய்தனர். டாஸ்மாக் கடையை நிரந்தரமாக மூடக்கோரி பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்ட நிலையில், 3 மாதங்களில் கடை இடமாற்றம் செய்யப்படும் என அதிகாரிகள் உறுதியளித்தனர்.

# தாம்பரம் செம்பாக்கம் பகுதியில் தமுமுக மமக அமைப்பு தேர்தல் பொதுக்குழு கூட்டம்

தாம்பரம் செப்.21-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் செம்பாக்கம் பகுதி தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் மற்றும் மனிதநேய மக்கள் கட்சி சார்பில் அமைப்பு தேர்தல் பொதுக்குழு கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

இக்கூட்டம் செங்கல்பட்டு மாவட்ட தலைவர் எஸ். கே.ஜாகிர் உசேன் தலைமையில் நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக மனிதநேய மக்கள் கட்சியின் மாநில துணைப் பொதுச் செயலாளரும், தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினருமான எம்.யாகூப் மற்றும் தேர்தல் அதிகாரியும் தலைமை பிரதிநிதியுமான ஏ.கே. சுல்தான் அமீர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பொதுக்குழு கூட்டத்தின் முக்கிய நிகழ்வாக தாம்பரம் செம்பாக்கம் பகுதி 3வது மண்டல, 39வது மற்றும் 41வது வார்டு நிர்வாகிகளுக்கான அமைப்பு தேர்தல் நடைபெற்றது. மேலும் தாம்பரம் மாநகரா ட்சிக்குட்பட்ட 41வது வார்டு மற்றும் 39வது வார்டுகளுக்கான நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

அமைப்பு தேர்தலில் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்களது பொறுப்புகளுக்கான பிரதிநிதிகளை தேர்வு செய்தனர். தேர்தல் அதிகாரி ஏ.கே. சுல்தான் அமீர் இந்தத் தேர்தல் நடைமுறையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வா கிகளுக்கு பொதுக்குழு கூட்டத்தில் அங்கீகாரம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

மேலும், தாம்பரம் செம்பாக்கம் பகுதியில் தமுமுகமமக அமைப்பின் செயல்பாடுகளை மேலும் வலுப்படு த்துவது, பொதுமக்களு க்கான



நலப்பணிகளை தொடர்ந்து முன்னெடுப்பது, சமூக நல்லிணக்கம் மற்றும் மக்கள் சேவையில் நிர்வாகிகள் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து கூட்டத்தில் ஆலோசிக்க ப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

புதிதாக தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகளுக்கு தலைமை நிர்வாகிகள் வாழ்த்து க்களை தெரிவித்ததுடன், அவர்களது பொறுப்புகளை சிறப்பாக மேற்கொண்டு மக்கள் நலனுக்காக தொடர்ந்து பணியாற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளர் ஜமால், மாவட்ட துணைச் செயலாளர் ஓகே.என்.அப்துல் காதர், மாவட்டச் செயலாளர் அப்துல் ரஹீம், எஸ்எம்ஜ தலைமை பிரதிநிதி ஜெய்னுல் ஆபூதின், மாவட்ட எம்.டி.எஸ் பொருளாளர் எம்.சதாம் உசேன், தமுமுக மற்றும் மமக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், வார்டு நிர்வாகிகள், இளைஞர்கள், மகளிர் அணியினர் மற்றும் கட்சி சார்ந்த பல்வேறு பொறுப்பாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தாம்பரம் செம்பாக்கம் பகுதியில் நடைபெற்ற இந்த அமைப்பு தேர்தல் பொதுக்குழு கூட்டம், தமுமுகமமக அமைப்பின் அடுத்தகட்ட செயல்பாடுகளுக்கு புதிய நிர்வாகிகளை உருவாக்கும் வகையில் நடைபெற்ற முக்கிய நிகழ்வாக அமைந்தது.




# ‘கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால்...’ – சத்துணவு ஊழியர் சங்கம் போராட்ட அறிவிப்பு

செங்கல்பட்டு, செப்.21–

சத்துணவு ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ.7,850 வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட 38 கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாவிட்டால், டிச. 9-ம் தேதி சத்துணவு மையங்களை மூடிவிட்டு மாவட்ட தலைநகரங்களில் மறியல் போராட்டம் நடத்தப்போவதாக தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாநில பிரதிநிதித்துவ பேரவை அறிவித்துள்ளது.

தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவ பேரவை செங்கல்பட்டில் நடைபெற்றது. மாநில தலைவர் பி. செல்லதுரை தலைமை வகித்தார். அஞ்சலி தீர்மானத்தை மாநில துணைத் தலைவர் எம்.ஆர். திலகவதி வாசித்தார். வரவேற்புக் குழுத் தலைவர் சா. முகமது உசேன் வரவேற்றார். பேரவையை தொடங்கி வைத்து சிஐடியு மாநில பொதுச் செயலாளர் எஸ். கண்ணன் பேசினார்.

மாநில பொதுச் செயலாளர் ஆ.ஜெசி வேலை அறிக்கையையும், மாநில பொருளாளர் வே. சித்திரா வரவு–செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் வாழ்த்திப் பேசினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் மு.பாஸ்கரன் பேரவையை நிறைவு செய்து பேசினார்.

பேரவையில், பணி ஓய்வு பெற்ற சத்துணவு அமைப்பாளர்களுக்கு ரூ.10 லட்சமும், சமையலர், உதவியாளர்களுக்கு ரூ.5 லட்சமும் பணிக்கொடை வழங்க வேண்டும். ஐந்து ஆண்டுகள் பணி நிறைவு செய்தும் சமையலர் பதவி உயர்வு கிடைக்காத உதவியா ளர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும். பதவி உயர்வுக்காக காத்திருக்கும் தகுதியானவர்களுக்கு அமைப்பாளர் பதவி உயர்வை விரைந்து வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

காலை உணவுத் திட்டத்தை சத்துணவுத் திட்டத்துடன் இணைக்க வேண்டும், சமூகத் தணிக்கை முறையை ரத்து செய்ய வேண்டும், சத்துணவு மையங்களில் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். 10, 20, 30 ஆண்டுகள் பணி நிறைவு செய்தவர்களுக்கு பணி மூப்பு ஊதிய உயர்வை நிலுவைத் தொகையுடன் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

தற்செயல் விடுப்பை தேவைக்கு ஏற்ப எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும், பணிக்காலத்தில் உயிரிழந்த சத்துணவு ஊழியர்களின் ஆண் வாரிசுகளுக்கு பணி வழங்க வேண்டும், தகுதி மற்றும் சிறப்புத் தகுதி பெற்ற அமைப்பாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளும் வலியுறுத்தப்பட்டன.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி அக். 14-ம் தேதி வட்டார, மாவட்ட, மாநில நிர்வாகிகள் பங்கேற்று தமிழக முதல்வரிடம் பெருந்திரள் முறையீடு நடத்துவது என்றும், அதற்குப் பிறகும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் டிச. 9-ம் தேதி சத்துணவு மையங்களை மூடிவிட்டு மாவட்ட தலைநகரங்களில் மறியல் போராட்டம் நடத்துவது என்றும் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# ‘45 ஆண்டுகளில் இல்லாத வேலையில்லா திண்டாட்டம்’ – மத்திய அரசை சாடும் மாணிக்கம் தாகூர்

சென்னை, செப்.21–

ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவோம் என வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்த பாஜக, கொடுத்த வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்றவே இல்லை என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: 2014-ஆம் ஆண்டு முதல் ஆட்சியில் இருக்கும் மோடி அரசு, ஆண்டுதோறும் 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்புகளை அள்ளித் தருவோம் என்று இளைஞர்களிடம் வெற்று வாக்குறுதிகளை மட்டுமே வழங்கி ஆட்சிக்கு வந்து 12 ஆண்டுகளாகியும் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. கொடுத்த வாக்குறுதியின்படி 12 ஆண்டுகளில் 24 கோடி பேருக்கு வேலை வழங்கியிருக்க வேண்டும். ஆனால், 45 ஆண்டுகளில் இல்லாத வேலையில்லா திண்டாட்டம் நாட்டில் தலைவிரித்தாடுகிறது.

கடந்த ஆகஸ்ட் 2026-ல் நிதி ஆயோக் வெளியிட்ட அறிக்கையில், 15 முதல் 29 வயதுக்குட்பட்ட 8.7 கோடி இளைஞர்கள் கல்வி, வேலை மற்றும் தொழிற்பயிற்சி எதுவுமின்றி முடங்கியுள்ளனர் என்பதும், 79.6 கோடி பேர் உழைக்கும் சந்தைக்கு வெளியே தள்ளப்பட்டுள்ளனர் என்பதும் அதிகாரப்பூர்வமாக அம்பலமானது.

படித்த பட்டதாரிகளில் வெறும் 8.25 சதவிகித பேருக்கு மட்டுமே தகுதிக்குரிய வேலை கிடைத்துள்ளது என்ற அதிர்ச்சித் தகவலும், பட்டம் பெற்ற பெண்களிடம் 20.4 சதவிகித வேலையின்மை நிலவுவதும் மோடி அரசின் விளம்பர அரசியலின் உண்மை முகத்தை அம்பலப்படுத்தியுள்ளது.

ஒருபுறம் மருத்துவக் கனவைச் சிதைக்கும் நீட், மறுபுறம் இளைஞர்களை வேலைக்கே போகவிடாமல் நடுத்தெருவில் நிறுத்தும் சமூக-பொருளாதார நெருக்கடி. தற்போது செப்டம்பர் 2026-ல் மத்திய புள்ளியியல் அமைச்சகம் வெளியிட்டுள்ள மாவட்ட அளவிலான காலமுறை தொழிலாளர் படை கணக்கெடுப்பு அறிக்கை, இந்த அவல நிலையை உள்ளூர் அளவில் மேலும் அம்பலமாக்கியுள்ளது.



நாடு முழுவதும் 250-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் 25 சதவிகிதத்திற்கும் அதிகமான இளைஞர்கள் கல்வி அல்லது வேலையின்றி முடங்கிக் கிடக்கின்றனர். மொத்தமாக ஆய்வு செய்யப்பட்ட மாவட்ட ங்களில் கிட்டத்தட்ட 23.7 சதவிகித பகுதிகளில் 30 சதவிகிதத்திற்கும் அதிகமான இளைஞர்களுக்கு எவ்வித வேலை வாய்ப்பும் இல்லாததால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

மோடி அரசின் இந்த நிர்வாகத் தோல்வியும் புறக்கணிப்பும் தமிழ்நாட்டிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தென் தமிழ்நாட்டின் முதன்மை நகரான மதுரையில் வேலையின்மை விகிதம் 7.0 சதவிகிதமாக விஸ்வரூபமெடுத்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் 24.9 சதவிகிதம், திருச்சி மாவட்டத்தில் 23.9 சதவிகிதம், மதுரை மாவட்டத்தில் 23.8 சதவிகிதம், சென்னை மாவட்டத்தில் 22.4 சதவிகிதம் என இளைஞர்கள் முறையான வேலை வாய்ப்பின்றி வாழ்வாதாரத்தை இழந்து முடங்கியுள்ளனர்.

கிராமப்புறத் தமிழ்நாட்டில் நிலையான ஊதிய வேலைகள் கிடைக்காமல், 30.4 சதவிகித குடும்பங்கள் முறைசாரா தினக்கூலி வேலைகளையே நம்பியிருக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சியை வழங்குவதாகக் கூறி புதிய கல்விக் கொள்கையைத் திணிக்கும் மத்திய அரசு, களத்தில் அவர்களுக்குக் கண்ணியமான வேலை வாய்ப்புகளை உருவாக்கத் தவறிவிட்டது.

தேசிய அளவில் 8.7 கோடி இளைஞர்களின் வாழ்வைச் சூறையாடியதோடு, மாவட்ட வாரியாகப் பல கோடி இளைஞர்களின் உழைப்பையும் ஆற்றலையும் வீணடித்து நடுத்தெருவில் நிறுத்தியுள்ள மோடி அரசின் பொருளாதாரத் துரோகங்களுக்கு, தங்களின் எதிர்காலத்தை இழந்து தவிக்கும் இந்த இளைய தலைமுறை ஒருபோதும் துணை நிற்காது.

மோடி அரசில் நிலவும் வேலையில்லா திண்டாட்டத்திற்கு உரிய பாடத்தை இந்திய இளைஞர்கள் நிச்சயம் புகட்டுவார்கள். இவ்வாறு மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார்.




# பண்டிகை காலத்தை முன்னிட்டு ஜோலார்பேட்டை, காட்பாடி வழியாக சிறப்பு ரயில்

சென்னை, செப்.21–

பண்டிகை காலத்தை முன்னிட்டு, சொந்த ஊருக்கு செல்லும் பயணிகள் வசதிக்காக, ஜோலார்பேட்டை, காட்பாடி வழியாக சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன.

அதன் விவரம்: திருவனந்தபுரம் வடக்கில் இருந்து அக்.2, 9, 16, 23, 30 ஆகிய தேதிகளில் (வெள்ளிக்கிழமைகளில்) மதியம் 2.15 மணிக்கு சிறப்பு ரயில் (06081) புறப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.45 மணிக்கு மேற்கு வங்கம் சந்திரகாச்சியை அடையும்.

மறுமார்க்கமாக, சந்திரகாச்சியில் இருந்து அக்.5, 12, 19, 26, நவ.2 ஆகிய தேதிகளில் (திங்கள் கிழமைகளில்) மதியம் 2.15 மணிக்கு சிறப்பு ரயில் (06082) புறப்பட்டு, புதன் கிழமைகளில் காலை 9.55 மணிக்கு திருவனந்தபுரம் வடக்கு ரயில் நிலையத்தை சென்றடையும். இந்த ரயில் கொல்லம், போத்தனூர், ஈரோடு, சேலம், ஜோலார்பேட்டை, காட்பாடி, திருத்தணி வழியாக சந்திரகாச்சியை அடையும்.

போத்தனூர் - பரௌனி- போத்தனூரில் இருந்து அக்.4, 11, 18, 25, நவ.1 ஆகிய தேதிகளில் (ஞாயிற்றுக் கிழமைகளில் ) காலை 6.15 மணிக்கு சிறப்பு ரயில் (06021) புறப்பட்டு, பிஹார் மாநிலம் பரௌனியை செவ்வாய்க் கிழமை மதியம் 1.30 மணிக்கு சென்றடையும்.

மறுமார்க்கமாக, பரௌனியில் இருந்து அக்.7, 14, 21, 28, நவ.4 ஆகிய தேதிகளில் (புதன்கிழமைகளில்) சிறப்பு ரயில் (06022) புறப்பட்டு, வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு போத்தனூரை அடையும். இந்த ரயில் ஜோலார்பேட்டை, காட்பாடி வழியாக இயக்கப்படும்.

இதுதவிர, திருவனந்தபுரம் சென்ட்ரல்- ராஜஸ்தான் மடார் சந்திப்பு இடையே ஒரு சிறப்பு ரயிலும், எர்ணாகுளம் பாட்னா இடையே ஒரு சிறப்பு ரயிலும் இயக்கப்படவுள்ளது. இந்த சிறப்பு ரயில்களுக்கான டிக்கெட் முன்பதிவு ஞாயிற்றுக்கிழமை (செப்.20) காலை 8 மணிக்கு தொடங்குகிறது. இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையில் டெங்கு ஒழிப்பில் 3,597 பணியாளர்கள்: மாநகராட்சி ஆணையர் தகவல்

சென்னை, செப்.21–

நகரில் டெங்கு ஒழிப்பு பணியில் 3,597 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ்.சமீரன் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சியில் அனைத்து மண்டலங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் கொசு ஒழிப்பு, டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் சுகாதாரப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம், ஆணையர் ஜி.எஸ். சமீரன் தலைமையில் ரிப்பன் மாளிகையில் நேற்று நடைபெற்றது.



இக்கூட்டத்தில் ஜி.எஸ். சமீரன் பேசியதாவது: மாநகராட்சியில் அனைத்து மண்டலங்களிலும் கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை மேலும் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். அனைத்து கல்வி நிறுவனங்களிலும் இப்பணிகளை மேற்கொண்டு தொடர் கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும்.

மக்களை பாதுகாப்பதில் அலுவலர்கள் முழு ஈடுபாட்டுடன் பணியாற்ற வேண்டும். கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்புப் பணியில் மொத்தம் 3,597 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கொசு ஒழிப்புப் பணிகளில் ஈடுபடும் பணியாளர்களுக்கு பயிற்சிகள் மற்றும் அறிவு ரைகள் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பணியாளரும் தினமும் 80 முதல் 100 வீடுகளைப் பார்வையிடுகின்றனர்.

மாநகரப் பகுதியில் காலியாக உள்ள நிலங்கள், வணிக வளாகங்கள், புதிய கட்டுமான இடங்கள், கல்வி நிறுவனங்கள், விடுதிகள், மருத்துவமனைகள், அரசு கட்டிடங்கள், வீடுகள் மற்றும் சுற்றப்புறப் பகுதிகளில் கொசு உற்பத்தியாகும் இடங்கள் மற் றும் கொசுப்புழு உருவாக வாய்ப் புள்ள தேங்காய் மட்டை, ஓடுகள், கண்ணாடிப் பொருட்கள், டயர் உள்ளிட்ட தேவையற்ற பொருட்கள் மாநகராட்சிப் பணியாளர்கள் மூலம் கண்டறியப்பட்டு அவற்றை அழிக்கும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 3 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 161 நபர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இதுபோல் மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடத்தப்படும். இவ்வாறு அவர் பேசினார். இக்கூட்டத்தில் துணை ஆணையர் (சுகாதாரம்) தாக்கரே சுகம் ஞான தேவராவ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இந்தியா – இலங்கை இருதரப்பு கடற்படை பயிற்சி: கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்த முயற்சி

புதுடெல்லி, செப்.21–

இந்தியா - இலங்கை இடையே கடல்சார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், இருதரப்பு கடற்படைப் பயிற்சி விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வருகிறது.

இது தொடர்பாக பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இலங்கை - இந்தியா இருதரப்பு கடற்படைப் பயிற்சியான ஸ்லினெக்ஸ்-26-ன் 13-வது பதிப்பு, செப்டம்பர் 17 முதல் 21 வரை விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வருகிறது.



இந்திய கடற்படை சார்பில், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்க்கப்பலான ஐஎன்எஸ் கவரட்டியும், கடற்படை எரிபொருள் நிரப்பும் கப்பலான ஐஎன்எஸ் ஜோதியும் இதில் பங்கேற்றுள்ளன. இலங்கைக் கடற்படை சார்பில் எஸ்எல்என்எஸ் சிந்துராலா இதில் பங்கேற்றுள்ளது.

இப்பயிற்சி இரு கடற்படை களுக்கும் இடையே கடல்சார் ஒத்துழைப்பு, ஒருங்கிணைந்த செயல்பாடு, பரஸ்பர புரிதலை வளர்ப்பதற்கான ஒரு முக்கிய தளமாக உருவெடுத்துள்ளது.

இந்தியாவின் மகாசாகர் தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க, ஸ்லினெக்ஸ்-26 பயிற்சியானது, பாதுகாப்பான, நிலையான, அனைவரையும் உள்ளடக்கிய கடல்சார் சூழலுக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதோடு, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீடித்த கடல்சார் ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துகிறது.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமூக வலைதளத்தில் மதுரை மீனாட்சியம்மன் மூலஸ்தான வீடியோ – போலீஸார் விசாரணை

மதுரை, செப்.21–

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் நெரிசலை தவிர்க்க செல்போனுடன் கோயிலுக்குள் அனுமதிக்கப்பட்ட பக்தர்கள் மூலஸ்தானத்தை வீடியோ பதிவு செய்து சமூக வலை தளங்களில் வெளியிட்டது தொடர்பாக போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் செப். 17-ல் குடமுழுக்கு நடைபெற்றது. குடமுழுக்கிற்கு பிறகு கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதையடுத்து பக்தர்கள் நெரிசலில் சிக்காமல் இருக்க செப். 17 முதல் இன்று வரை இலவச பொது தரிசனத்தில் மட்டும் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

மீனாட்சியம்மன் கோயிலுக்குள் பக்தர்கள் செல்போன் கொண்டுச் செல்ல உயர் நீதிமன்ற மதுரை அமர்வு தடை விதித்துள்ளது. பக்தர்கள் தங்களின் செல்போன்களை செல்போன் சேகரிப்பு மையங்களில் கொடுத்துவிட்டு கோயிலுக்கு செல்ல வேண்டும். குடமுழுக்கிற்கு பிறகு இலவச பொது தரிசனத்திற்கு பக்தர்கள் அதிகளவில் வருவதால் செல்போன் வாங்கும் இடங்களில் நெரிசல் ஏற்பட்டு வருகிறது.

இதை தவிர்க்க பக்தர்கள் செல்போன்களுடன் கோயிலுக்குள் அனுமதிக்கப்பட்டனர். அவ்வாறு செல்போன் எடுத்துச் சென்ற சிலர் அம்மன், சுவாமி மூலஸ்தானத்தை செல்போனில் வீடியோ பதிவு செய்து சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்ததாக கோயில் நிர்வாகத்திடமும், காவல்துறையிலும் புகார் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து மீனாட்சியம்மன் கோயில் மூலஸ்தானத்தை வீடியோ பதிவு செய்து சமூக வலைதளங்களில் பரப்பியவர்கள் தொடர்பாக போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

இந்த சம்பவத்தை அடுத்து பக்தர்கள் கோயிலுக்குள் செல்போன் கொண்டுச் செல்ல தடை விதிக்கப்பட்டு, வழக்கம் போல் கோயிலுக்கு வெளியே செல்போன்களை வாங்கி வைத்துக் கொண்டே பக்தர்கள் கோயிலுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.



# கூடலூரில் பிடிபட்ட புலி வண்டலூர் பூங்காவில் ஒப்படைப்பு

வண்டலூர், செப்.21–

கூடலூர் வனப்பிரிவில் 28 நாட்களாக தேடப்பட்டு வந்த ஆண் புலி, சில்வர் கிளவுட் தேயிலைத் தோட்டப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை கூண்டில் சிக்கியது.

வனத்துறையினர் நடத்திய ஆய்வில், கூடலூர் பகுதியில் இருவர் உயிரிழந்த சம்பவத்தில் தொடர்புடைய புலி இது என்பது உறுதி செய்யப்பட்டது. 200-க்கும் மேற்பட்ட வனத்துறையினர், கும்கி யானைகள், கேமரா பொறிகள், ஆளில்லா விமானங்கள், கூண்டுகள் உதவியுடன் புலியைப் பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பிடிபட்ட புலி மருத்துவப் பரிசோதனைக்காக முதலில் முதுமலை புலிகள் காப்பகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் பாதுகாப் பாக ஒப்படைக்கப்பட்டது. பூங்கா நிர்வாகத்தின் செய்திக் குறிப்பின்படி, சுமார் 10 வயது ஆண் புலி தற்போது சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் உள்ளது. வனவிலங்கு மருத்துவர்கள் மற்றும் விலங்கு பராமரிப்புக் குழுவினர் அதன் உடல் நிலையை தொடர்ந்து கண்காணித்து வருவதாக தெரிவித்தனர்.

# ராமேசுவரம், மண்டபம் கடற்கரையில் தூய்மைப் பணி: 2+ டன் குப்பைகள் சேகரிப்பு

ராமேசுவரம், செப்.21–

சர்வதேச கடலோர தூய்மை தினத்தை முன்னிட்டு ராமேசுவரம், மண்டபம் கடற்கரையில் தூய்மை பணி நடைபெற்றது.

எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை, இந்திய தேசிய கடல் தகவல் சேவை மையத்துடன் இணைந்து, சர்வதேச கடலோர தூய்மை தினத்தை முன்னிட்டு ராமேசுவரம் ஓலைக்குடா கடற்கரையில் தூய்மை பணி நடைபெற்றது.



எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் இயக்குனர் வேல்விழி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் இந்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் விஞ்ஞானி முனைவர் ஜக்விர் சிங், இந்திய கடற்படை கமாண்டிங் அதிகாரி ராஜேஷ், இந்திய தேசிய கடல் தகவல் சேவை மையத்தின் விஞ்ஞானி வெங்கட் பிரசாத்,

ராமேசுவரம் துறைமுக அலுவலர் மானேக்ஸா, மீன்வளத்துறை ஆய்வாளர் விஷால், ஓலைக்குடா கிராம தலைவர் ஜெரோன் குமார், மண்டபம் மெரைன் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் காளிதாஸ், அகில இந்திய யாத்ரீகர்கள் பணியார்கள் சங்க தலைவர் கண் இளங்கோ ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தங்கச்சிமடம் உதயம் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள், இந்திய கடற்படை அதிகாரிகள், மீனவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உள்பட 98 நபர்கள் கலந்து கொண்டு கடலோரம் உள்ள பிளாஸ்டிக் குப்பைகள் 515 கிலோ சேகரிக்கப்பட்டு ராமேசுவரம் நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது.

மண்டபத்தில் உள்ள கடற்கரை பூங்காவில் நடைபெற்ற தூய்மைப் பணியில் மீன்துறை துணை இயக்குனர் சின்ன குப்பன், மத்திய கடல் மீன் ஆராய்ச்சி விஞ்ஞானி நவீன் குமார், வனத்துறை மாவட்ட அதிகாரி கோபிநாத்,

வனத்துறை அலுவலர் ஜினோ, மண்டபம் பேரூராட்சி தலைவர் ராஜா மீனவர் சங்கத்தலைவர் ஜாகீர் உசைன் மற்றும் 250 தன்னார்வலர்கள் கலந்து கொண்டு பிளாஸ்டிக், பேய்வலைகள் உள்பட 1.8 டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு மண்டபம் பேரூராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161